தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

TAMIL UNIVERSITY, THANJAVUR

# சேர்க்கைக்கையேடு - 2010 -11

## முனைவர் பட்டம்
## ஆய்வியல் நிறைஞர் பட்டம்
## முதுநிலைப் பட்டம்
## முதுநிலைப் பட்டயம்
## முதுகலைப் பட்டயம்
## பட்டயம்
## சான்றிதழ் - வகுப்புகள்


**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**திருச்சி நெடுஞ்சாலை**
**தஞ்சாவூர் - 613 010**

| | |
|---|---|
| தொலைபேசி எண்கள் | : 04362 - 227782,<br>04362 - 227845,<br>04362 - 227518 |
| தொலைநகலி எண் | : 04362 - 226159 |
| தொலைவரி | : வளர்தமிழ் |
| இணைய தளம் | : www.tamiluniversity.ac.in |

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஓர் உயர்நிலை ஆய்வு மையமாக 1981-ஆம் ஆண்டு செப்தம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் தொடங்கப்பெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சை-திருச்சி நெடுஞ்சாலையில், தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் பரந்து விரிந்த ஏறத்தாழ 900 ஏக்கர் நிலப்பரப்பில் எழில்மிகு இயற்கைச் சூழலில் அமைந்துள்ள ஓர் உயர்கல்வி நிறுவனமாகும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஐந்து புலங்களின்கீழ் இருபத்து ஐந்து துறைகள் செயல்படுகின்றன.

இப்பல்கலைக்கழகத்தில் பாராளுமன்ற வடிவமைப்பில் உயர்நிலை ஆய்வுக்கு உறுதுணையாக ஒரு நூலகம் அமைந்துள்ளது. இதில் 1,43,575 நூல்களும், 345 பருவ இதழ்களும் ஆய்வு மாணவர்களின் பயன்பாட்டிற்கு இடம்பெற்றுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகத் துறைகள் அனைத்தும் கணிப்பொறி வசதியைப் பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் துறைத்தலைவர்கள் தம்முடைய துறைகளில் சிறப்பான பட்டங்களையும், பயிற்சிகளையும், ஆய்வு அனுபவங்களையும் பெற்றுள்ளதுடன் அரிய பல ஆய்வு நூல்களையும் எழுதி அளித்துள்ளனர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவர்களின் பயன்பாட்டிற்கெனவும் பயிற்சிக்காகவும் கணிப்பொறி அறிவியல் துறை செயல்படுகிறது. இத்துறையில் மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் இணையதள இணைப்பும் உள்ளது. முதுநிலை மாணவர்கள் நாட்டு நலப்பணித்திட்டத்தில் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பும் உள்ளது.

2006-07ம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டாகக் கொண்டாடப்பட்டு பல்வேறு செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந் நிகழ்வினையொட்டி இரண்டு புதிய துறைகள் தொடங்கப்பட்டன. மேலும், 2006-07 கல்வியாண்டு முதல் தெரிவு அடிப்படை மதிப்பெண் முறை (CBCS) செய்லபடுத்தப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கென வேலைவாய்ப்பு வழிகாட்டும் மையம் செயல்படுகிறது. மாணவர்கள் குறைதீர்க்கும் அமைப்பும், முன்னாள் மாணவர்கள் அமைப்பும் மாணவர்கள் நலன் கருதி செயல்பட்டு வருகின்றன. மாணவ, மாணவியர்களுக்குத் தனித்தனியாக விடுதி வசதிகள் உள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு தேசிய தரமதிப்பீட்டுக் குழுமம் (NAAC)B++ தரம் வழங்கி பெருமைப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பல்கலைக்கழக நல்கைக்குழு (UGC) மூலம் பல்வேறு திட்டங்களுக்கு கூடுதல் நிதியுதவி கிடைக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

**பாடத்திட்டம்:** தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டப் படிப்பிற்கான பாடத்திட்டங்கள் தொடர்புடைய துறைகளில் மாணவர்கள் உயர் ஆய்வினைத் தொடரும் வகையிலும், வேலை வாய்ப்பிற்குரிய தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி அடையும் வகையிலும் திட்டமிடப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளன. பட்டயம், சான்றிதழ் வகுப்புகள் மாணவர்கள் பகுதி நேரமாகப் பயிலும் வகையிலும், எதிர்கால வேலைவாய்ப்புப் பயன்பாட்டைக் கருத்திற்கொண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளன. படிப்பில் கவனம் செலுத்துதல், கருத்தரங்குகள், பணிப்பட்டறைகளில் பங்கேற்றல், களப்பணிக்கு செல்லுதல், ஆய்வுக்கட்டுரை அளித்தல் ஆகியன பாடத்திட்டத்தின் பகுதிகளாகக் கருதப்பெற்று அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் வழங்கப்பெறுகின்றன. பட்டப்படிப்புடன் கூடுதலாக சான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்புகள் படிக்கும் வசதியும் உள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2010-11 ஆம் கல்வியாண்டில் பின்வரும் துறைகளில் அதில் குறிப்பிட்டுள்ள படிப்புகளுக்கான சேர்க்கை தொடங்கப்படவுள்ளன.

முழு நேரம் மற்றும் பகுதி நேர முனைவர் பட்டம் (Ph.D) / ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பட்டப்படிப்பு உள்ள துறைகள்:

1. சிற்பத்துறை
2. இசைத்துறை
3. நாடகத்துறை
4. ஓலைச்சுவடித்துறை
5. அரிய கையெழுத்துச்சுவடித்துறை
6. கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்துறை
7. நீரகழாய்வு மையம்
8. அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
9. மொழிபெயர்ப்புத்துறை
10. அகராதியியல் துறை
11. சமூக அறிவியல் துறை
12. அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை
13. கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
14. இலக்கியத்துறை
15. மொழியியல் துறை
16. தத்துவ மையம்

17. பழங்குடி மக்கள் ஆய்வு மையம்
18. நாட்டுப்புறவியல் துறை
19. இந்திய மொழிகள் பள்ளி
20. சித்த மருத்துவத்துறை
21. தொல்அறிவியல் துறை
22. தொழில் மற்றும் நில அறிவியல் துறை
23. கட்டடக்கலைத்துறை
24. கணிப்பொறி அறிவியல் துறை (ஆய்வியல் நிறைஞர் மட்டும்)
25. சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை
26. நூலகம் (முனைவர் பட்டம் மட்டும்)

***துறையிடை ஆய்வுக்கும் (Inter Disciplinary Research) வாய்ப்புகள் உள்ளன.**

**கல்வித்தகுதி:**

முதுநிலைப் பட்டப்படிப்பில் (Post Graduate) 55% மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். எஸ்.சி./எஸ்.டி மாணவர்கள் 50% பெற்றிருந்தால் போதுமானது.

**சித்த மருத்துவத்திற்குரிய கல்வித் தகுதிகள்:**

முதுஅறிவியல், சித்த மருத்துவம், ஆங்கிலம் மருத்துவம், உயிர் வேதியியல், பண்டுவ உயிர் வேதியியல், மருந்தியல், மருந்தாக்கவியல், தாவரவியல், நுண்ணுயிரியல், விலங்கியல், வேதியியல், உயிர் நுட்பவியல், வேளாண் இயல், ஆயுர்வேத மருத்துவம், நாட்டுப்புற மருத்துவம், உளவியல். யோகா.

**காலம்:**

(முழு நேர / பகுதி நேர முனைவர் பட்டப்படிப்பிற்கு ஒவ்வொரு காலாண்டிற்கும் சேர்க்கை உண்டு)

| | | |
|---|---|---|
| **முனைவர் பட்டம்** | முழு நேரம் | முதுகலைத் தகுதியுடன் 3 ஆண்டுகள்.<br>ஆய்வியல் நிறைஞர் தகுதியுடன் 2 ஆண்டுகள். |

| | | |
|---|---|---|
| **முனைவர் பட்டம்** | பகுதி நேரம் | மேற்குறித்த காலத்துடன் கூடுதலாக ஓராண்டு |
| **ஆய்வியல் நிறைஞர் பட்டம்** | முழு நேரம் | ஓராண்டு |
| **ஆய்வியல் நிறைஞர் பட்டம்** | பகுதி நேரம் | இரண்டாண்டுகள் |

**முதுகலை (எம்.ஏ., M.A.,) முதுஅறிவியல் (எம்.எஸ்ஸி., (M.Sc)**

(முழு நேரம் : இரண்டாண்டுகள் - நான்கு பருவங்கள்)

| முதுகலைப்பாடம் M.A. | பயிற்றுவிக்கும் துறை | சேர்க்கைத் தகுதி பகுதி-1 தமிழில் தேர்ச்சியுடன் |
|---|---|---|
| 1. தமிழ் இலக்கியம் | இலக்கியம் | ஏதாவது ஒரு இளநிலைப்பட்டம் |
| 2. பயன்பாட்டு மொழியியல் | மொழியியல் | ஏதாவது ஒரு இளநிலைப்பட்டம் |
| 3. வரலாறு, கலை மற்றும் பண்பாடு | சிற்பம் | ஏதாவது ஒரு இளநிலைப்பட்டம் |
| 4. கோயில் நிர்வாகவியல் சுற்றுலாவியல் மற்றும் தத்துவம் | தத்துவம் | ஏதாவது ஒரு இளநிலைப்பட்டம் |
| 5. வரலாறு மற்றும் தொல்லியல் | கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் | ஏதாவது ஒரு இளநிலைப்பட்டம் |
| 6. செம்மொழித் தமிழ் இலக்கியம் | நாட்டுப்புறவியல் துறை | ஏதாவது ஒரு இளநிலைப்பட்டம் |
| 7. இசை | இசைத்துறை | இசையில் இளங்கலைத் தேர்ச்சி (அல்லது)இளங்கலைப் பட்டப்படிப்புடன் (அல்லது) இளநிலைப் பட்டப்படிப்புடன் சங்கீத வித்வான் / இசைக்கலைமணி/ இசைமேல்நிலை/ஏழிசைமணி/இசைப் பள்ளிப்படிப்பு இவற்றில் ஏதேனும் ஒன்றில் தேர்ச்சி |

| | | | |
|---|---|---|---|
| 8. | தமிழ் - பயன்பாட்டுத் தமிழியல் | அகராதியியல் | ஏதாவது ஒரு இளநிலைப்பட்டம் |
| 8. | யோகா | தத்துவம் | ஏதாவது ஒரு இளநிலைப்பட்டம் |

-----------------------------------------------------------------------------------------------------------

| | முதுஅறிவியல் M.Sc., | பாடம் பயிற்றுவிக்கும் | சேர்க்கைத் தகுதி |
|---|---|---|---|
| 10. | சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை | சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் | இளங்கலை உயிர் அறிவியல் (Life Science) சுற்றுச்சூழல் அறிவியல் /விலங்கியல்/ தாவரவியல்/நுண்ணியல்/உயிர்வேதியியல்/ வேதியியல்/ வேளாண்மையியல்/புவியியல்/ நில அறிவியல் /மண்ணியல் /மற்றும் தொடர்புடைய பிற அறிவியல் பாடங்களில் ஏதாவது ஒரு பாடத்தை முதன்மையாகக் கொண்டு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| 11. | கணிப்பொறி அறிவியல் **(M.Sc.I.T)** | கணிப்பொறி அறிவியல் துறை | கணிப்பொறியை ஒரு பாடமாகப் பயின்று இளநிலைப்பட்டம் அல்லது கணிப்பொறி தகவல் தொழில் நுட்பவியல் அல்லது இணைய தொழில் நுட்பவியல் அல்லது கணிப்பொறி பயன்பாடு ஆகியவற்றில் பட்டப்படிப்பு அல்லது கணிதத்தைத் துணைப்பாடமாகக் கொண்ட ஏதாவது ஒரு பட்டப் படிப்பில் தேர்ச்சி அல்லது +2 அல்லது நிகரான படிப்பில் கணிதத்தை ஒரு பாடமாகப் பெற்றிருந்து ஏதாவது ஒரு பட்டப்படிப்பில் தேர்ச்சி |
| 12. | நில அறிவியல் | தொழில் மற்றும் நில அறிவியல் துறை | நிலவியல் (B.Sc.Geography) அல்லது மண்ணியல் (B.Sc. Geology) இளநிலைப் பட்டம் |

| | | |
|---|---|---|
| 13. உயிர் மருத்துவ அறிவியல் | சித்த மருத்துவத் துறை | இளநிலை (B.Sc) உயிர் அறிவியல் (Life Science) சுற்றுச்சூழல் அறிவியல்/விலங்கியல்/தாவரவியல்/நுண்ணுயிரியல்/உயிர் வேதியியல்/வேதியியல்/ உயிர் நுட்பவியல்/ உணவியல்/மருந்தியல்/வேளாண்மையியல்/புவியியல்/நிலஅறிவியல்/மண்ணியல்/மற்றும் தொடர்புடைய பிற அறிவியல் பாடங்களில் ஏதாவது ஒரு பாடத்தை முதன்மையாகக் கொண்டு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| 14. இளங்கலை கல்வியியல் **(B.Ed)** | கல்வியியல் மற்றும் மேலாண்மை இயல் துறை | ஏதாவது ஒரு இளநிலைப்பட்டம் |

* ஐந்து பருவத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று ஆறாவது பருவத் தேர்வு எழுதித் தேர்வு முடிவுக்குக் காத்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**பட்டயம் (Diploma) படிப்பு: பகுதி நேரம். காலம்: ஓராண்டு**

| பட்டயம் பாடம் | சேர்க்கைத் தகுதி துறை | பயிற்றுவிக்கும் துறை |
|---|---|---|
| 1. சைவசித்தாந்தம் | +2 தேர்ச்சி | தத்துவ மையம் |
| 2. யோகா | +2 தேர்ச்சி | தத்துவ மையம் |
| 3. நடிப்புக் கலையியல் | +2 தேர்ச்சி | நாடகம் |
| 4. கணிப்பொறி பயன்பாடு | +2 தேர்ச்சி | கணிப்பொறி அறிவியல் |

**முதுநிலைப் பட்டயம் (P.G Diploma) படிப்பு: பகுதி நேரம். காலம்: ஓராண்டு**

| பாடம் | சேர்க்கைத் தகுதி | பயிற்றுவிக்கும் துறை |
|---|---|---|
| 1. மூலிகை உயிரித் தொழில் நுட்பம் Herbal Bio-technology | இளங்கலை பட்டம் தாவரவியல் முதுநிலைப் பட்டயம் | சுற்றுச் சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை |

| | | |
|---|---|---|
| | விலங்கியல் வேதியியல், உயிர் வேதியியல்,நுண்ணுயிரியல் உயிரி தொழில்நுட்பவியல்) | |
| 2. சுற்றுச்சூழல் மேலாண்மை Environmental Management | ஏதாவதொரு அறிவியல் பாடத்தில் இளங்கலைப் பட்டம் முதுநிலைப் பட்டயம் | சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை |
| 3. சித்த மருத்துவ மருந்துகளின் தர நிர்ணயப்படுத்துதல் Siddha Drug Standardi-zation | இளநிலை அறிவியல் பட்டம் (வேதியியல்,உயிர் வேதியியல் நுண்ணுயிரியியல், மருந்தியல், உணவியல்) | சித்த மருத்துவத்துறை |

**முதுநிலைப் பட்டயம் (P.G.Diploma) படிப்பு: பகுதி நேரம். காலம்: ஒன்றரை ஆண்டு**

| பட்டயம் பாடம் | சேர்க்கைத் தகுதி துறை | பயிற்றுவிக்கும் துறை |
|---|---|---|
| 1.. நாடகப் படைப்பாக்கம் | பட்டயம் அல்லது இளங்கலை் பட்டம் | நாடகம் |
| 2. அகராதியியல் | பட்டயம் அல்லது இளங்கலைப் பட்டம் | அகராதியியல் |

**முதுகலைப் பட்டயப் படிப்பு: (P.G.Diploma) பகுதி நேரம். காலம்: இரண்டு ஆண்டுகள்**

| பட்டயம் பாடம் | சேர்க்கைத் தகுதி துறை | பயிற்றுவிக்கும் துறை |
|---|---|---|
| 1. மொழிபெயர்ப்பியல் **(P.G.Diploma)** | முதுகலைப்பட்டம் அல்லது முதுநிலைப் பட்டயம் | மொழிபெயர்ப்புத் துறை |

**சான்றிதழ் படிப்பு (Certificate Course) படிப்பு: பகுதி நேரம். காலம்: இரண்டு ஆண்டு**

| பட்டயம் பாடம் | சேர்க்கைத் தகுதி துறை | பயிற்றுவிக்கும் துறை |
|---|---|---|
| 1. இசை | 10ம் வகுப்பு தேர்ச்சி | இசைத்துறை |
| 2. தெலுங்கு | 10ம் வகுப்பு தேர்ச்சி | இந்திய மொழிகள் பள்ளி |
| 3. இணைய மொழிகள் | 10ம் வகுப்பு தேர்ச்சி | கணிப்பொறி அறிவியல் |

**விண்ணப்பம்**

மேற்குறிப்பிட்ட படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் பெற விண்ணப்பக் கட்டணமாக ரூ.200.00க்கு (ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களுக்கான சான்று அளித்தால் ரூ.100.00) இளங்கல்வியியல் பட்டப்படிப்பிற்கு விண்ணப்பக்கட்டணம் ரூ.600/- (தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கு ரூ.300/-) **'பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்'** என்று பெயரில் வங்கி வரைவோலையாக அளித்து அல்லது பல்கலைக்கழக நிதிப்பிரிவில் நேரிடையாகத் தொகை செலுத்தி, நேரிடையாகவோ அல்லது அஞ்சல்தலை ஒட்டி சுயமுகவரியிட்ட உறை அனுப்பியோ தமிழ்ப் பல்கலைக்கழகச் சேர்க்கைப் பிரிவில் இருந்து விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

முனைவர் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்புகளுக்கான பதிவு பாண்டிச்சேரி, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் குன்றக்குடி ஆதினம் அறக்கட்டளை கல்வியியல் கல்லூரியிலும் நடைபெறுகின்றன. மேலும் ஆய்வியல் நிறைஞர் மற்றும் முதுகலை - தமிழ், தமிழ் - பயன்பாட்டுத் தமிழியல் பட்டப்படிப்புகள் சென்னை, தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மையத்திலும் நடைபெறுகின்றன. மேற்கண்ட மையங்களில் பதிவு மேற்கொள்பவர்கள் அம்மைய இயக்குநர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பங்கள் நிறைவு செய்தல்**

மேற்குறித்த படிப்புகளுக்குரிய விண்ணப்பங்களை மாணவர்கள் கவனமாகவும், தெளிவாகவும் நிறைவு செய்தல் வேண்டும். விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானதாக அமைந்திருத்தல் வேண்டும். மாற்றுச்சான்று, சாதிச்சான்று, கல்விச்சான்று ஆகியவற்றிற்கான

சான்றளிக்கப்பட்ட ஒளிப்பட நகல்கள் இணைத்தனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்கள் விண்ணப்பங்களுடன் இணைக்கப்பெறல் கூடாது.

**நுழைவுத் தேர்வு மற்றும் சேர்க்கை**

முனைவர் பட்டம், ஆய்வியல் நிறைஞர் மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்பிற்கு பல்கலைக்கழகத்தாரால் நுழைவுத் தேர்வு நடத்தப்பெறும். நுழைவுத் தேர்வு நடைபெறவுள்ள நாள், நேரம், இடம் ஆகியன தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு அலுவலகம்/துறைத் தலைவர்களால் நேரடியாக அறிவிக்கப்பெறும். நுழைவுத் தேர்வுக்கு வராதவர்கள் தகுதியற்றவர் ஆவர். மாணவர் சேர்க்கை தகுதியின் அடிப்படையிலும் தமிழக அரசு அறிவித்துள்ள இனவாரி சுழற்சி முறை அடிப்படையிலும் முடிவு செய்யப்பெறும். நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண் மற்றும் இளங்கலை/முதுகலை படிப்பில் பெற்ற மதிப்பெண் ஆகியவற்றின் அடிப்படையில் மாணவர் சேர்க்கைக்குக் கருதப்பெறுவர்.

**கல்வி உதவித்தொகை**

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினருக்கு (SC/ST கல்வி உதவித்தொகை மற்றும் உயர்கல்வி உதவித்தொகை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகம் மூலம் பெற்று வழங்கப்பெறும். அதைபோல் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் (BC, MBC, DNC) மாணவர்களுக்கு மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை அலுவலகம் மூலம் கல்வி உதவித்தொகை பெற்று வழங்கப்படும். மேலும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளை மூலம் சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். பல்கலைக்கழக மானியக்குழு நிறுவனத்தின் மூலம் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த முனைவர் பட்ட மற்றும் ஆய்வியல் நிறைஞர் படிக்கும் ஆய்வு மாணவர்களுக்கு இராஜிவ் காந்தி உதவித் தொகை வழங்கப்பெறவும், ICHR, ICCR போன்ற நிறுவனங்களிலிருந்து கல்வி உதவித் தொகை பெறவும் பரிந்துரைக்கப்பெறும்.

**கட்டண விவரம்**

| படிப்பு | பயிற்றுக்கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் | | காப்புறுதிக் கட்டணம் (மீள வழங்கத்தக்கது) |
|---|---|---|---|
| | அறிவியல்துறை | பிற துறை | |
| **1. முனைவர் பட்டம்** | | | |
| **சேர்க்கையின்போது** | | | |
| முழுநேரம் | 7550 | 5550 | 3000 அறிவியல் |
| பகுதி நேரம் | 8050 | 6050 | 2000 பிற துறை |
| **ஆண்டுதோறும்** | | | |
| முழுநேரம் | 2500 | 1500 | |
| பகுதி நேரம் | 3000 | 2000 | |
| **2. ஆய்வியல் நிறைஞர் பட்டம்** | | | |
| **சேர்க்கையின்போது** | | | |
| முழுநேரம் | 5200 | 4200 | 1000 |
| பகுதி நேரம் | 6625 | 5625 | 2000 |
| **இரண்டாமாண்டு** | 2500 | 1500 | -- |

**3. முதுநிலைப்பட்டங்கள்**

| | **கட்டணங்கள்** | **காப்புறுதிக்கட்டணம்** (மீள வழங்கத்தக்கது) |
|---|---|---|
| **அ. முதுகலை (M.A)** | | |
| சேர்க்கையின்போது | 3150 | 1000 |
| 2-ஆம் பருவம் மற்றும் | 1000 | |
| 4-ஆம் பருவம் | 1000 | |
| 3-ஆம் பருவம் | 1850 | |

**ஆ. முது அறிவியல் (M.Sc., Earth Science)**

| | | |
|---|---|---|
| சேர்க்கையின்போது | 5150 | 1000 |
| 2-ஆம் பருவம் மற்றும் | 1000 | |
| 4-ஆம் பருவம் | 1000 | |
| 3-ஆம் பருவம் | 1850 | |

**இ. சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் (M.Sc. Environmental Science)**

| | | |
|---|---|---|
| சேர்க்கையின்போது | 5150 | 1000 |
| 2-ஆம் பருவம் மற்றும் | 1000 | |
| 4-ஆம் பருவம் | 1000 | |
| 3-ஆம் பருவம் | 1850 | |

**ஈ.முதுஅறிவியல் - உயிர் மருத்துவ அறிவியல் (M.Sc. Bio-Medical Science)**

| | | |
|---|---|---|
| சேர்க்கையின்போது | 5150 | 1000 |
| 2-ஆம் பருவம் மற்றும் | 1000 | |
| 4-ஆம் பருவம் | 1000 | |
| 3-ஆம் பருவம் | 1850 | |

**உ. கணிப்பொறி அறிவியல (M.Sc. Computer Science)**

| | | |
|---|---|---|
| சேர்க்கையின்போது | 5150 | 1000 |
| 2-ஆம் பருவம் மற்றும் | 1000 | |
| 4-ஆம் பருவம் | 1000 | |
| 3-ஆம் பருவம் | 1850 | |

| | | |
|---|---|---|
| **4. சான்றிதழ்** | 600 | |
| **5. பட்டயம்** | 1000 | (செய்முறை தேர்ச்சி இருப்பின் கூடுதலாக ரூ.500/-) |